*Kalanjiyam International Journal of Tamil Studies*
*An international, peer-reviewed quarterly academic research journal*
ISSN: 2456-5148 (Online)
www.ngmtamil.in

களஞ்சியம் – சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்
Quarterly Peer-Reviewed Open Access Crossref Google Scholar
SJIF Impact Factor 4.355 Multidisciplinary International
: https://doi.org/10.63300/kijts06022026

**Vol. 6 No. 02, August 2026**, **p681-690** | Available online at: www.tamilmanam.in
*Original Research Paper*

# திருநெல்வேலி மற்றும் தென்காசி மாவட்டத்தின் சில கோயில் கல்வெட்டு ஆதாரங்களின் அடிப்படையில் மறைந்த தமிழ் பெயர்கள் - ஒரு வரலாற்றுப் பார்வை

*Obscure Tamil Names Based on Temple Inscription Evidences from Tirunelveli and Tenkasi Districts: A Historical Perspective*

**முனைவர் பொ.தீபா,**
உதவிப் பேராசிரியர் மற்றும் துறைத்தலைவர்,
ஸ்ரீ ராம் நல்லமணி யாதவா கலை மற்றும் அறிவியல் கல்லூரி, தென்காசி - 627804

**Dr.P.Deepa*,**
*Assistant Professor and Head, Dept of History,*
*Sri Ram Nallamani Yadava Arts and Science College , Tenkasi – 627804.*
*Email: deeluxmathi@gmail.com..*

*Article history*
Received: 20-08-2026
Revised: 20-08-2026
Accepted: 24-08-2026
**Published: 29-08-2026**
*Corresponding Author
Email: *deeluxmathi@gmail.com*

**Abstract:**
In keeping with the Nannool verse that states, "Discarding the old and embracing the new is appropriate as times change," Tamil society has been undergoing various transformations in its way of life. It has lost some of its distinctiveness due to shifts in governance, cultural changes, and the intermingling of other languages. The advancement of Civilization ought to enhance an ethnic group's identity; however, the current development of Tamil society is resulting in the loss of the uniqueness and intrinsic meaning of Tamil-its mother language. In this context, this study explores the original names of towns and temples established with specific purpose and significance by the ancient Tamil communities in the present-day districts of Tirunelveli and Tenkasi, as well as how they have currently lost their original identity. The Tamil language has been a global pioneer across all spheres-including politics, art, literature, religion, governance, and rural. For administrative convenience, the kingdom was divided into various tiers-such as village assemblies, temple assemblies, regional assemblies, and the royal assembly-each with its own identify; the villages and temples falling under these bodies were referred to by names that incorporated the king's name or other identifying markers. Over time, however, these names faded from our knowledge due to the influence of other languages and a waning attachment to the mother language. By recovering the original names of the various villages and temples in these districts-which once formed part of the Pandya kingdom-from inscriptions and bringing them back to public memory, we can rediscover their grandeur and the heritage we had lost.

**Keywords:** *Mandalam, Chadurvethi Mangalam, Valanaadu, Naadu, Udaiyar, Nayanar, Vinnakara Alvar.*

Copyright © 2024 by the author(s). Published by Department of Library, Nallamuthu Gounder Mahalingam College, Pollachi. This is an open access article under the Creative Commons Attribution (CC BY) license (https://creativecommons.org/licenses/by/4.0/).

**முன்னுரை**

ஒரு பாரம்பரியத்தை எதிர் வரும் சமூகத்துக்கு எடுத்துச் செல்லும் அடையாளமாக இருப்பவைகளில் நமது கோயில் கல்வெட்டுகளும் ஒன்றாகும். நாகரீக வளர்ச்சி என்பதே ஒரு சமுகம் தனெக்கென ஒரு கட்டமைப்பையும் சில அடையாளங்களையும் மொழி அடிப்படையிலோ அல்லது வழக்கியல் அடிப்படையிலோ ஏற்படுத்திக் கொண்டதே ஆகும். அவ்வாறு ஏற்படுத்திய அடையாளங்கள் தான் அடுத்த தலைமுறையினருக்கான வாழ்வியல் வழிகாட்டுதல் ஆகும். காலத்தில் சிறந்த நம் தமிழ்குடிச் சான்றோர்கள் நம்முடைய வாழ்வியல் நடைமுறைக்காக எடுத்துச் சொன்ன இலக்கணங்களும் இலக்கியங்களும் புராணகதைகளும் இதிகாசங்களும் கல்வெட்டு செய்திகளும் செப்பு பட்டயங்களும், ஒரு சமூகத்தை எவ்வாறு கட்டமைத்தனர் என்ற அடையாளங்களை நமக்குத் தருகின்றன. தெய்வத் திருமேனிகளை எழுப்பி அவர்களுக்காக கலை நுணுக்கம் கொண்ட சிற்பங்களையும் ஓவியங்களையும் உள்ளடக்கிய பரந்த ஆலயங்களையும் கட்டுவித்து, ஆலயங்கள் செல்படும் வகையில் தான தர்மங்களையும் வழங்கி, அதன் மூலம் சமூகத்தையும், மன்னர்கள் செயல்பட வைத்தனர் என்பதை அவர்களின் கல்வெட்டு தொன்மங்களின் மூலம் அறிய முடிகின்றது. ஆனால் அக்கல்வெட்டுகளில் சொல்லப்பட்ட தானங்களும், ஊர்களின் பெயர்களும், ஆலயங்களில் உள்ள தெய்வங்களின் திருநாமங்களும் திரிந்தும் மறைந்தும் போய்விட்டன. அத்தகைய வரலாற்று அடையாளங்களை பாதுகாக்க வேண்டும் என்ற மனநிலை மக்களிடம் இல்லாமல் போனதே இதற்குக் காரணம். திருநெல்வேலி மற்றும் தென்காசி மாவட்டத்தின் சில ஆலயங்களின் கல்வெட்டுகளில் உள்ள சில ஊர்கள், ஆலயங்கள், திருமேனிகளின் பெயர்கள், வழக்கில் இருந்த மொழிகள் என மறைந்து போன தொன்மங்கள் இங்கு நினைவூட்டப்படுகின்றன. மாற்றங்களால் மறக்கப்பட்ட அத்தகைய அடையாளங்களை மீண்டும் உயிர்பிக்க முடியாவிட்டாலும் அவைகளை நினைவில் கொண்டுவருவது நமது கடமை ஆகும்.

**அரசியல் காரணங்கள்**

ஒரு நாட்டில் அந்நியர் ஆட்சி ஏற்பட்டால் அந்த நாட்டின் பாரம்பரியங்களும் அமைப்பு முறைகளும் மாறுவது தவிர்க்க முடியாத நிகழ்வாகும். அந்த அடிப்படையில் பாண்டிய நாட்டில் சோழர்களின் ஆட்சி ஏற்பட்டபோது பாண்டியர்களின் மரபுகளை பறை சாற்றும் மெய் கீர்த்திகள், ஆலயங்களின் பெயர்கள், நாடுகளின் பெயர்கள், சதுர்வேதிமங்கலங்களின் பெயர்கள், சபைகள் என அனைத்திலும் மாற்றம் செய்யப்பட்டது. இதனால் பாண்டிய தேசம் தன்னுடைய தனித்துவமான தொன்மங்களை இழந்து சோழ மன்னர்களின் பெயர்களே முன்னிலை படுத்தப்பட்டது. குறிப்பாக சோழர்கள் ஆட்சியில் பாண்டிய நாடு இராஜராஜ பாண்டிய மண்டலம் என்றும், தென்பகுதிகள் முடிகொண்ட சோழ மண்டலம் என்றும் தலைநகரில் (மதுரை) இருந்த அரண்மனை ராஜேந்திர சோழ மண்டலம் என்றும் அழைக்கப்பட்டது. சோழ, விஜயநகர, இஸ்லாமிய மற்றும் ஆங்கிலேய

ஆட்சிகளால் பாண்டிய நாட்டின் அடையாளங்கள் பெரும்பாலும் மறைந்து விட்டது. கல்வெட்டுகளில் இன்று நாம் காணும் சாட்சிகள் தான் பாண்டிய நாட்டில் நாம் இழந்த மதிப்பு மிக்க வரலாற்று தொன்மங்களை நமக்கு நினைவூட்டுகின்றன.

**நாடுகளின் பிரிவுகள்**

மன்னர்கள் தங்களின் ஆட்சி சிறப்பாக செயல்பட வேண்டும் என்பதற்காக நிலவியல் அடிப்படையில் நாட்டை பல பகுதிகளாகப் பிரித்து தனித்தமிழ் பெயரிட்டு நிர்வாகம் செய்துள்ளனர். அதன்படி மதுரையை தலைநகராக கொண்ட பாண்டிய நாட்டில் இன்றைய திருநெல்வேலி மற்றும் தென்காசி மாவட்டங்கள் பல நாடுகளாக பிரிக்கப்பட்டு இருந்தது. அதன்படி

ஆரி நாடு என்பது தற்போதைய தென்காசி மாவட்டத்தின் வாசுதேவநல்லூர், புளியங்குடி, தாருகாபுரம் மற்றும் அதனை சுற்றி உள்ள பகுதிகளை உள்ளடக்கியது.

சிவகிரி, விஸ்வநாதபேரி (விஸ்வநாத ஏரி) தென்மலை உள்ளிட்ட பகுதிகளை கொண்டது விதரன வினோத வளநாடு என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

வட ஆரி நாடு என்பது செங்கோட்டையின் கிழக்குப் பகுதிகள் மற்றும் சொக்கம்பட்டி, கடையநல்லூர், இடைகால் உள்ளிட்ட பகுதிகளை கொண்டது.

தென் ஆரி நாடு என்பது தென்காசியின் மேற்குப் பகுதிகள், தெற்குப் பகுதிகள், குற்றாலம் மற்றும் இலஞ்சி உள்ளிட்ட பகுதிகளை கொண்டது.

கள்ளக நாடு என்பது சங்கரன்கோவிலின் (சங்கரநாராயணர் கோயில்) சில பகுதிகள் வீரசிகாமணி, சேர்ந்தமங்கலம், கரிவலம் வந்த நல்லூர் உள்ளிட்ட பகுதிகளை கொண்டது.

குற்றிளமை நாடு என்பது செங்கோட்டையின் மேற்குப் பகுதிகளாகிய புளியறை, கார்குடி, புதூர் மற்றும் அதனை சுற்றி உள்ள பகுதிகளாகும்.

குறுமறை நாடு என்பது வட ஆரி நாட்டுக்கும் தென் ஆரி நாட்டுக்கும் இடையில் சிறு பகுதியாக ஆரம்பித்து சாம்பவர் வடகரையின் மேற்கு பகுதிகள் மற்றும் கீழப்பாவூர், மேலப்பாவூர், சுந்தரபாண்டியபுரம் உள்ளிட்ட பகுதிகளை உள்ளடக்கியது.

களக்குடி நாடு என்பது மாறாந்தை, களக்குடி, உக்கிரன்கோட்டை, செழியநல்லூர் உள்ளிட்ட பகுதிகளைக் கொண்டது.

கீழ் வேம்பு நாடு என்பது கங்கை கொண்டான், இராஜவல்லிபுரம், உள்ளிட்ட பகுதிகளை கொண்டது.

மேல் வேம்பு நாடு என்பது திருநெல்வேலி, பேட்டை, சுத்தமல்லி உள்ளிட்ட பகுதிகள் கொண்டது.

தென்கரை நாடு என்பது தற்போதைய திடியூர், செங்குளம் மற்றும் சிங்கிகுளம் போன்ற பகுதிகளைக் கொண்டது.

கீழ்களக்கூற்றம் நாடு என்பது சீவலப்பேரி, மணப்படை வீடு, பாளையம்கோட்டை பகுதிகளை உள்ளடக்கியது.

முல்லி நாடு (மேற்கு) என்பது கடையம், அம்பாசமுத்திரம், சேரன்மகாதேவி உள்ளிட்ட பகுதிகள் ஆகும்.

முல்லி நாடு (கிழக்கு) என்பது மேலச்செவல், கூனியூர், கல்லூர், அரிகேசவ நல்லூர் உள்ளிட்ட பகுதிகளை கொண்டது.

**ஊர்களின் பெயர்கள்:**

**விதரன வினோத வளநாடு:**

தென்காசியின் சிவகிரியும் அருகில் உள்ள விஸ்வநாதபேரி என்ற ஊரும் தான் கல்வெட்டுகளில் விதரன வினோத வளநாடு என்று சொல்லப்பட்டுள்ளது. இதை கல்வெட்டுகளில் முடிகொண்ட சோழ வளநாட்டு கள்ளக நாட்டு பிரம்மதேயத்து விதரன வினோத சதுர்வேதி மங்கலம் என்று குறிபிடப்பட்டுள்ளது.

**கீழப்பராக்கிரம நல்லூர்:**

தென் ஆரி நாடு என்று அழைக்கப்பட்ட தற்போதைய தென்காசியின் கிழக்கு பகுதியான காய்கறி சந்தையின் அருகில் உள்ள குலசேகரமுடைய நாயனார் கோயில் பகுதிகள் தான் கல்வெட்டுகளில் கீழப் பராக்கிரம நல்லூர் அல்லது குலசேகர நல்லூர் என்று சொல்லப்பட்டுள்ளது. இந்த கோயிலின் வழிபாடு மற்றும் திருவிழாவுக்காக சுந்தரபாண்டிய பேரேரி குளம் தானமாகக் கொடுக்கப்பட்டுள்ளது. தென்காசியின் கிழக்கு பகுதில் உள்ள இந்த ஊர் தற்போதும் கல்வெட்டில் உள்ளபடி சுந்தரபாண்டியபுரம் என்று தான் அழைக்கப்படுகின்றது.

**தென் ஆரி நாடு**

தென்காசி பாண்டியர்களின் தலைநகரமாக இருந்த தென் ஆரி நாடு எனப்படும் தென்காசி கோயிலின் இறைவன் திருநாமம் காசிவிஸ்வநாதர், இறைவி உலகமுடைய நாச்சியார். கோயிலின் மாசி மகம் திருவிழாவிற்காக பாண்டிய மன்னன் அரிகேசரி தேவனால் தென்காசி, இலஞ்சி, புலியூர், பட்டக்குறிச்சி, துவரங்காடு, இடத்தவனை, சாகா வீரானம் பேரேரி, மேல்பற்று, குறுமறை, விதரன வினோத வளநாடு, ராஜசிங்கபேரி பற்று, கள்ளக நாட்டு வீரசிகாமணி பற்று எனப் பல ஊர்களை தானமாக கொடுத்துள்ளார். தானங்களை கொடுக்கும் போது சூரிய சந்திரன் உள்ளவரை இந்த தானம் இருக்கும் என்று கல்வெட்டுகளில் குறிப்பிடப்பட்டு தான் கொடுக்கப்படுகின்றன. மன்னர்கள் கொடுத்த பல ஊர்கள் இன்றும் உள்ளன. ஆனால் தானங்கள் மட்டும் இல்லாமல் போயிற்று.

**பராக்கிரம பாண்டிய சதுர்வேதி மங்கலம்**

தென்காசியின் கிழக்கு பகுதியில் உள்ள தற்போதைய கீழப் புலியூர் தான் பராக்கிரம பாண்டிய சதுர்வேதி மங்கலம் என கல்வெட்டில் பெயர் பெற்றுள்ளது.

**கொல்லங்கொண்ட பாண்டிய சதுர்வேதி மங்கலம்**

ஆழ்வார்க்குறிச்சியில் உள்ள தற்போதைய நரசிங்கநாதர் கோயில் கல்வெட்டில் இத்தலத்து இறைவன் பெயர் கொல்லங்கொண்ட பாண்டிய சதுர்வேதி மங்கலத்து நரசிங்க ஈஸ்வர உடைய நாயனார் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. இறைவனுடைய திருநாமம் பெரியளவில் மாற்றம் அடையாமல் இன்றும் அவ்வாறே அழைக்கப்படுவது சிறப்பு. அருகில் உள்ள செட்டிகுளம் என்ற ஊர் ராமப்ப நாயக்கர் அய்யனால் இந்த கோயிலுக்கு தானமாக வழங்கப்பட்டுள்ளது. இன்றும் அந்த ஊர் அதே பெயரில் உள்ளது.

**இளங்கோய்க்குடி:**

தற்போதைய அம்பாசமுத்திரம் உள்ளிட்ட பகுதிகள் பாண்டியர்களின் ஆட்சிக்காலத்தில் மேற்கு முல்லி நாட்டு பகுதியை சேர்ந்தது. கல்வெட்டுகளில் குறிப்பிடப்பட்டுள்ள முல்லி நாட்டு இளங்கோய்க்குடி என்பது தற்போதைய அம்பாசமுத்திரம் தான் என்பதையும் அதன் பழைய பெயர் இளங்கோய்க்குடி என்பதையும் அறிய முடிகின்றது. ஆயினும் அருகில் உள்ள சேரன்மகாதேவி தான் காலத்தால் முற்பட்டது.

**திருப்போத்துடைய நாயனார்:**

பாண்டியர்களின் கல்வெட்டுகளில் முல்லி நாட்டை சேர்ந்த இளங்கோய்குடி திருப்போத்துடைய ஆழ்வார் என்று குறிப்பிடப்பட்டுள்ளது இதன்படி தற்போதைய அம்பாசமுத்திரம் நகரில் தன்பொருநை ஆற்றின் வடக்கு கரையில் அமைந்துள்ள இந்த கோயிலுக்கு எரிச்ச உடையார், எரித்தாண்டு கொண்டார், திருப்போத்துடைய நாயனார், திருபோத்துடைய தேவர், திருப்போத்துடைய பட்டரர், திருப்போத்துடைய மகாதேவர் என்ற கல்வெட்டு பெயர்களும் காசியபநாதர், காசிநாதர், காசி ஈஸ்வரர் என பல புதிய பெயர்களும் இருக்கின்றன. இந்த எரிச்ச உடையார் கோயிலின் விமானத்திற்கு ஸ்ரீகரண திருச்சித்திரக்கூடம் என்ற பெயரும் கல்வெட்டில் இருக்கின்றது.

தன்பொருநை ஆற்றின் வடக்கு கரையில் அமைந்துள்ள மற்றுமொரு கோயில் திருமூலநாத சுவாமி கோயில் ஆகும். இவருக்கு கல்வெட்டுகளில் திருமூலநாத சுவாமி, திருமூலட்ட நாதர், திருமூலஸ்தானத்து பரமேஸ்வரர், திருச்சாலைத்துறை மகாதேவர் என்ற பல பெயர்களும் இருக்கின்றன. இந்த கோயிலில் பெருமாளுக்கு என்று தனி சன்னதியும் உள்ளது. இந்த இறைவருக்கு பாண்டியர்களின் காலத்தில் நின்று அருளின எம்பெருமான் எனவும் சோழர்களின் காலத்தில் கரிய மாணிக்கப் பெருமாள், கருமாணிக்கத்தேவர், திருப்போத்துடைய ஆழ்வார் என்ற திருநாமங்களும் இருந்துள்ளது. ஆனால் தற்போது நவநீத கிருஷ்ணன் என மக்கள் அழைக்கின்றனர்.

**சத்திரியசிகாமணிபுரம்**

சடாவர்மன் சுந்தர சோழபாண்டிய மன்னனின் ஆட்சிக் கல்வெட்டில் கோயிலில் விளக்கு எரிக்க சத்திரியசிகாமணிபுரத்து நகரத்தில் இருந்து வழங்கப்பட்ட தானங்களை பற்றி குறிப்புகள் இருக்கின்றது. இதில் கூறப்பட்ட சத்திரியசிகாமணிபுரம் என்பது தற்போதைய கல்லிடைக்குறிச்சி ஆகும்.

**திருப்படு மருதில்**

தற்போதைய திருபுடைமருதூர், கல்வெட்டுகளில் முல்லி நாட்டு திருப்படுமருதில் என்று பெயர் பெற்றுள்ளது. இறைவனின் திருநாமம் திருபுடைமருதூர் உடைய நாயனார், நாறும்பூ கொண்டருளிய நாயனார், ஸ்ரீபுடர்ஜனேஸ்வரர் எனவும், இறைவி திருகாமக்கோட்டமுடைய நாச்சியார் எனவும் அழைக்கப்பட்டுள்ளனர். ஆனால் தற்போது இறைவியை கோமதி அம்பாள் என அழைக்கின்றனர்.

**ராஜேந்திர சோழ விண்ணகர ஆழ்வார்**

அம்பாசமுத்திரம் அருகே உள்ள மன்னார்கோயில் இறைவனுடைய தற்போதைய பெயர் தான் கோபால சுவாமி ஆகும். ஆனால் கல்வெட்டுகளின் படி சோழர்களின் ஆட்சிக்கு உட்பட்ட சடாவர்மன் சுந்தர சோழ பாண்டியனின் நிர்வாகத்தில், இராஜராஜ பாண்டிய நாட்டின் முடிகொண்ட சோழ வளநாட்டின் முல்லி நாட்டைச் சேர்ந்த பிரம்மதேயத்தின் இராஜராஜ சதுர்வேதி மங்கலத்தில் உள்ள ராஜேந்திர சோழ விண்ணகர ஆழ்வார் என அழைக்கப்படுகிறார். எனவே கோபால சுவாமி என்பது பிற்காலத்தில் ஏற்பட்ட பெயர் என்று தெரிகின்றது.

**கைலாசமுடையார் கோயில்:**

சேரன்மகாதேவியில் உள்ள தற்போதைய அம்மைநாதர் ஆலயம் பாண்டியர்கள் ஆட்சியில் சேரன்மகாதேவி சதுர்வேதி மங்கலத்து கையிலாயமுடையார் கோயில் என அழைக்கப்பட்ட நிலையில் சோழர்களின் ஆட்சியில் நிகரிலி சோழ சதுர்வேதி மங்கலத்து சோழேந்திர சிம்க ஈஸ்வரமுடையார் கோயில் என மாற்றப்பட்டது.

மேலும் போற்றுதலுக்குரிய தன் பொருநை ஆறும் சோழர்களின் ஆட்சிக் காலத்தில் முடிகொண்ட சோழப்பேராறு என அழைக்கப்பட்டது. மதுரையில் உள்ள பாண்டியர்களின் அரண்மனையும் ராஜேந்திர சோழபுரம் என பெயர் மாற்றம் செய்யப்பட்டது. கல்வெட்டில் இராஜராஜ சதுர்வேதி மங்கலத்தில் (சேரன்மகாதேவி) ராஜேந்திர சோழப் பெருந்தெரு என்ற தெரு இருந்ததாக குறிப்பிடப்பட்டுள்ளது. இதன் மூலம் சோழர்கள் பாண்டிய தேசங்களின் அனைத்து பெயர்களையும் மாற்றியுள்ளனர் என்பது தெரிகின்றது.

**நிகரிலி சோழ விண்ணகர் உய்யகொண்ட ஆழ்வார்**

சேரன்மகாதேவியின் மையப்பகுதியில் இருக்கும் ராம சுவாமி கோயிலின் கல்வெட்டில் இறைவன் பெயர் இராஜராஜ சதுர்வேதி மங்கலத்து நிகரிலி சோழ விண்ணகர் உய்யகொண்ட

ஆழ்வார் மற்றும் ராஜேந்திர சோழ விண்ணகர பரம சுவாமிகள் ஆகும். இந்த கோயிலை சேர மன்னன் இராஜசிம்கன் சோழ மன்னனின் பெயரில் கட்டினார். சேர மன்னர்களும் சோழர்களின் ஆட்சியின் கீழ் இருந்ததால் இவ்வாறு கட்டப்பட்டு இருக்கலாம். ஆரம்ப காலங்களில் சேரன்மகாதேவி என்ற பெயர் கல்வெட்டுகளில் பஞ்சவன் மாதேவிச்சேரி என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

**குடற்குடி:**

சேரன்மாகதேவியில் உள்ள அம்மைநாத சுவாமி கோயிலின் கல்வெட்டு ஒன்றில் இராஜராஜ பாண்டிய நாட்டு இருஞ்சோ நாட்டின் வானவ மாதேவிபுரத்தைச் சேர்ந்த வணிகன் ஒருவன் குடற்குடி மகாதேவர் கோவிலுக்கு 25 ஆடுகளை தானமாக வழங்கியுள்ளார். அந்த குடற்குடி என்பது தற்போது இருக்கன்குடிக்கு அருகில் உள்ள குண்டலக்குட்டு என்ற ஊர் ஆகும். ஆயினும் மகாதேவர் கோயில் எங்கு உள்ளது என்று அறிய முடியவில்லை.

**காணவினிய விண்ணகர ஆழ்வார்**

சேரன்மகாதேவியில் இருந்து திருநெல்வேலி செல்லும் சாலையில் சுமார் 7 கி.மி. தொலைவில் அமைந்துள்ள இடம் மேலச்செவல். இங்குள்ள வெங்கடாசலபதி கோயிலில் உள்ள கல்வெட்டில் இக்கோயிலின் இயற்பெயர் காணவினிய விண்ணகர ஆழ்வார் என்றும் தென் திருஅயோத்தியை என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது. மேலும் விஜயநகர ஆட்சிக் காலத்தில் மேலச்செவல் என்னும் இந்த ஊர் சுவலான வீரகேரள சதுர்வேதி மங்கலம் என்று அழைக்கப்பட்டுள்ளது.

**முத்துகிருஷ்ணபுரம்**

விஜயநகர ஆட்சிக் காலத்தில் வீர வெங்கலபதி மகாராயர் கூனியூர் என்னும் முத்துகிருஷ்ணபுரம் ஊரில் உள்ள பிராமணர்களுக்கு தானங்கள் கொடுத்துள்ளார். கல்வெட்டின் படி திருவடிராஜ்யத்தின் முல்லி நாட்டு வீரவநல்லூர் மாகாண கூனியூர் என்று அழைக்கப்படுகின்றது.

**சுத்த வல்லி வீரவினோத சதுர்வேதி மங்கலம்**

திருநெல்வேலியின் மேற்குப் பகுதில் உள்ள இந்த ஊரின் பெயர் கல்வெட்டுகளில் மேல் வேம்பு நாட்டு சுத்த வல்லி வீரவினோத சதுர்வேதி மங்கலம் என்று கூறப்பட்டுள்ளது. சுத்தமல்லி என்ற இந்த ஊர் கல்வெட்டுகளில் அதிக முக்கியத்துவத்தைப் பெற்றுள்ளது. இங்குள்ள பகவதீஸ்வர உடையார், அங்குந்தீஸ்வர உடையார் மற்றும் சௌந்தரராஜ பெருமான் ஆகிய மூன்று வரலாற்றுச் சிறப்பு மிக்க கோயில்கள் இருக்கின்றன. ஆனால் தற்போது பகவதீஸ்வர உடையார் கோயில் பகவதி ஈஸ்வரர் என்றும், சௌந்தரராஜ பெருமான் கோயில் அழகிய மன்னர் பெருமாள் என்றும், அங்குந்தீஸ்வரர் கோயில் தவணை சாஸ்தா சிவன் கோயில் என்றும் அழைக்கப்படுகின்றது. தன்பொருநை ஆற்றின் அருகில் தவணை தலம் என்ற இடத்தில் படித்துறைகளுடன் அமைந்துள்ள இந்த அங்குந்தீஸ்வரர் ஆலயத்தின் பெயர் மறைந்து அருகில் பிற்காலத்தில் ஏற்பட்ட பிற கோயில்கள் வளர்ச்சி

அடைந்துள்ளன. அங்குந்தீஸ்வரர் கோயில் என்றால் உள்ளூர் மக்களுக்கே தெரியாமல் இருப்பது மிகவும் வருந்தத்தக்க நிலைமை.

**கரிய மாணிக்கப் பெருமாள்**

திருநெல்வேலி மாவட்டத்தின் சீவலப்பேரி ஊரில் தற்போது காட்டழகர் மற்றும் சுந்தர ராஜ பெருமாள் என்று அழைக்கப்படும் இந்த கோயில் இறைவன் திருநாமம் சோழர்களின் ஆட்சியில் இராஜராஜ மண்டலத்து கீழ்களக்கூற்றத்து திருமுக்கூடல் தென் திருமாலிருஞ்சோலை கருமாணிக்கதேவர் என்ற திருநாமத்துடன் குறிப்பிடப்பட்டுள்ளது. பாண்டியர்களின் கல்வெட்டுகளில் கரிய மாணிக்க பெருமாள் என்றும் உள்ளது. மேலும் தென் திருமாலிருஞ்சோலை என்ற பெயரிலும் கல்வெட்டுகளில் இடம் பெற்றுள்ளது. மதுரையில் உள்ள கள்ளழகர் கோயிலில் இருந்து வேறுபடுத்திக் காட்ட வேண்டும் என்பதற்காக தெற்கில் உள்ள என்ற பொருளில் தென் என்ற வார்த்தை சேர்க்கப்பட்டுள்ளது. மேலும் இந்த ஆலயத்தில் உள்ள கல்வெட்டு தாமிரபரணி ஆற்றை தன் பொருந்தம் என குறிப்பிடுகின்றது.

சடாவர்மன் சுந்தர சோழ பாண்டிய காலத்திய கல்வெட்டு ஒன்றில் இராஜேந்திர சோழ வளநாட்டைச் சேர்ந்த கருக்குடி நாட்டு திரலோக்யமாதேவி சதுர்வேதி மங்கலத்து திருவேளூர் கிராமத்தை சேர்ந்த ரவினரயணன் (ரவிநாராயணன்) என்பவர் இந்த தென் திருமாலிருஞ்சோலை எம்பெருமானுக்கு நொந்த விளக்கு எரிக்க ஆடுகளை தானமாக வழங்கியுள்ளார். இந்த திருவேளூர் என்பது தற்போதைய பரமக்குடி ஊரின் அருகில் திருவள்ளூர் என்ற பெயருடன் உள்ளது.

**உடைய நாயனார்கோயில்:**

புகழ் பெற்ற திருநெல்வேலி நெல்லையப்பர் கோவிலின் கல்வெட்டு பெயர் கீழ் வேம்பு நாட்டு திருநெல்வேலி குலசேகரச் சதுர்வேதி மங்கலத்து உடைய நாயனார் என்பதாகும். முதலாம் சடாவர்மன் குலசேகர பாண்டியன் சோழர்களிடம் இருந்து பாண்டிய நாட்டை மீட்ட பிறகு இந்த குலசேகர சதுர்வேதி மங்கலம் ஏற்படுத்தப்பட்டது. சோழர்களின் ஆட்சிக் காலத்தில் இந்த ஊர் இராஜராஜ சதுர்வேதி மங்கலத்து திருநெல்வேலி உடையார் கோயில் என்று சொல்லப்பட்டுள்ளது.

**உடைய பிராட்டி**

திருநெல்வேலியில் உள்ள தச்சகன் நல்லூர் (தச்சநல்லூர்) அருகில் உடையார்பட்டி என்னும் இடம் உள்ளது. மாறவர்மன் சுந்தர பாண்டியன் காலத்திய கல்வெட்டு இந்த இடத்தை உடைய பிராட்டி என்று குறிப்பிடுகின்றது.

**ஸ்ரீ வல்லப சதுர்வேதி மங்கலம்**

இன்றைய பாளையம்கோட்டை, பாண்டியர் கால கல்வெட்டுகளில் கீழ் வேம்பு நாட்டு ஸ்ரீ வல்லப சதுர்வேதி மங்கலம் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. மேலும் தற்போது இராஜகோபால சுவாமி என்று அழைக்கப்படும் இக்கோயில் பாண்டியர்களின் ஆட்சியில் கீழ்க்களக் கூற்றத்து பிரம்மதேயம்

ஸ்ரீ வல்லப திருமேற்கோவில், சீவல்லப விண்ணகர பெருமான் என்றும், சோழர்களின் ஆட்சிக் காலத்தில் ஸ்ரீ வீரநாராயண விண்ணகர் என்றும், திருவிதாங்கூர் அரசின் கல்வெட்டில் ஸ்ரீவல்லவன் மங்கலத்து அழகிய மன்னார்கோவில் என்றும் அழைக்கப்பட்டுள்ளது.

**இராஜவில்லிபுரம்**

பாலாமடைக்கு அருகில் அமைந்துள்ள இந்த கிராமம் பாண்டியர்களின் ஆட்சிக் காலத்தில் கீழ்வேம்பு நாட்டு இராஜ வல்லபபுரம் என்றும், இராஜவில்லிபுரம் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது. இங்குள்ள கோயிலின் திருமேனி அக்னீஸ்வர நாயனார் என்று அழைக்கப்படுகிறார். ஆண்டுகள் பல கடந்த பின்னும் ஊரும் சுவாமியும் அதே பெயர்களில் அழைக்கப்படுவது சிறப்பு.

**அம்பலத்தாடி நல்லூர்**

பாளையங்கோட்டை அருகில் உள்ள இந்த ஊர் பாண்டிய மன்னர்களின் படைகள் தங்கி இருந்த இடமாகும். மணல் நிறைந்த பகுதியாக இருந்ததால் மணல் + படை + வீடு = மணல்படைவீடு என்ற சொல் பேச்சு வழக்கில் மணப்படை வீடு என மருவியது. கீழ்களக்கூற்ற நாட்டை சேர்ந்த சீவல்லப மங்கலம் என்று அழைக்கப்பட்டுள்ளது. மேலும் இந்த ஊருக்கு அம்பலத்தாடி நல்லூர் என்றும் பெயரும் இருந்துள்ளது.

**மூன்றீச்வரமுடையார் கோயில்**

தொன்மை நிறைந்த மணப்படை வீட்டில் மூன்றீச்வரமுடைய நாயனார் என்னும் பழங்கோயில் உள்ளது. இந்த கோயில் கல்வெட்டில் கீழ்களக் கூற்றத்து பிரம்மதேயத்து ஸ்ரீவல்லவ மங்கலத்து கீழ்பிடாகை அம்பலத்தாடி நல்லூரான மணப்படை வீட்டில் உடையார் மூன்றிச் சுரமுடைய நயினார் கோயில் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. மணப்படை வீடு என்ற பெயர் மாறாமல் உள்ளது. ஆயினும் இறைவன் திருநாமம் யாருக்கும் தெரிவதில்லை. மாறாக சிவன் கோயில் என்றே அழைக்கப்படுகின்றது.

**கரவந்தபுரம்**

களக்குடி என்னும் இந்த ஊர் உக்கிரன்கோட்டையில் உள்ள சோழன் தலை கொண்ட வீர பாண்டியன் காலத்திய கல்வெட்டுகளில் பாண்டிய மார்தாண்ட வளநாட்டு கரவந்தபுரம் என்றும், களக்குடி என்றும் சொல்லப்பட்டுள்ளது. பாண்டியர்கள் மற்றும் சோழர்களின் ஆட்சியில் சொல்லப்பட்டுள்ள களக்குடி நாடு என்னும் இந்த ஊர் மிகச் சிறந்த புகழோடு இருந்துள்ளது.

**அழகியமானநிலை நல்லூர்**

மாறவர்மன் சடையனின் 35ம் ஆட்சி ஆண்டு கல்வெட்டில் மானூர் என்பது களக்குடி நாட்டு பிரம்மதேயத்து அழகிய மான நிலை நல்லூர் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. இந்த மான நிலை நல்லூரே வழக்கொழிந்து மானூர் என்று மருவியுள்ளது.

**முடிவுரை**

இந்தியாவிலேய அதிக எண்ணிக்கையிலான கல்வெட்டுகள் கொண்ட மாநிலம் தமிழ்நாடு என்ற பெருமையை நமக்கு தந்தவர்களும் நம் முன்னோர்கள் தான். நம் முன்னோர்கள் தானங்களை பற்றி மட்டும் கல்வெட்டுகளில் எழுதவில்லை, மாறாக கல்வெட்டுகளையே நமக்கு தானமாக வழங்கியுள்ளனர். அவ்வாறு வழங்கவில்லை என்றால் அவர்களின் மாண்புகள் நமக்கு தெரியாமல் போய் இருக்கும். காலத்தின் மாற்றம் என்பது வளர்ச்சியை நோக்கிய பயணமாக இருக்க வேண்டும். ஆனால் தமிழ் சமூகமோ தமிழின் அடிச்சுவடியை மறக்கும் வகையில் பயணித்து கொண்டு இருக்கின்றது.

ஊர்களும் கோயில்களும் தோற்றுவிக்கப்பட்ட போது இருந்த பல பெயர்கள் தற்போது அறிந்து கொள்ள இயலாத நிலையில் உள்ளன. சில பெயர்கள் கல்வெட்டுகளில் இருந்தும் கண்டுபிடிக்க முடியாத நிலையில் உள்ளன. நல்வாய்ப்பாக கண்டுபிடிக்கப்பட்ட சில அறிவார்ந்த தமிழ் பெயர்களை நடைமுறைக்கு கொண்டுவரவும் யாரும் தயாராக இல்லை. நடைமுறையில் இருக்கும் பல ஆரம்ப கால பெயர்களும் வழக்கு மொழியில் திரிபு அடைந்து முரண்பட்டு இருக்கின்றன. கல்வெட்டுகளில் அரசியல் மற்றும் சமூகத்தில் மிகுந்த முக்கியத்துவம் பெற்று இருந்த பல கோயில்கள் தற்போது கவனிப்பார் இன்றி பக்தர்கள் வருகை இன்றி இருப்பது தமிழ் சமூகம் தன்னுடைய அடையாளமான தமிழ் தொன்மங்களை ஏற்றுக் கொள்ள மறுக்கின்றதா என்று தெரியவில்லை. அருந்தமிழ் சொற்கள் மீண்டும் எப்போது தழைக்குமோ அவனியில் ...

**தரவுச் சான்றுகள்:**


1) சென்னை மாகாண கல்வெட்டுகள், 1915 – வி.ரஙகாச்சாரியா, தொகுதி-3.
2) தென் இந்தியக் கல்வெட்டுகள், தொகுதி-14, 1986.
3) இந்தியக் கல்வெட்டு ஆண்டறிக்கை- மார்ச்-1935.
4) திருநெல்வேலி மாவட்டக் கல்வெட்டுகள், முதல் தொகுதி, 2009.


**References:**


1. INSCRIPTIONS OF THE MADRAS PRESIDENCY, 1915, V. RANGACHARYA, VOLUME III.
2. SOUTH INDIAN INSCRIPTIONS, VOLUME -14, 1986.
3. ANNUAL REPORT OF INDIAN EPIGRAPHY, MARCH-1935.
4. INSCRIPTIONS OF TIRUNELVELI DISTRICT, VOLUME-I, 2009.



**ஆசிரியர் அறிவிப்பு — நலன் முரண்பாடு பற்றிய கூற்று**

இக்கட்டுரையின் ஆசிரியர், இவ்வாய்வுக் கட்டுரையின் எழுத்துப்பணி தொடர்பாக எவ்வித நிதிசார், தனிப்பட்ட அல்லது தொழில்முறை நலன் முரண்பாடும் இல்லை என உறுதியாகத் தெரிவித்துக் கொள்கிறார். இக்கட்டுரையானது முற்றிலும் கல்விசார் மற்றும் ஆய்வு நோக்கத்திற்காக மட்டுமே தயாரிக்கப்பட்டுள்ளது; இதற்கு எவ்வித நிதி உதவியோ, நிறுவன ஆதரவோ பெறப்படவில்லை. இதில் பயன்படுத்தப்பட்டுள்ள அனைத்து மூலநூல் மேற்கோள்களும், இணையவழி ஆதாரங்களும் அறிவுசார் நேர்மையுடன், உரிய சான்றுடன் இணைக்கப்பட்டுள்ளன.